9 - STD **அரையாண்டுத் தேர்வு - 2023** பதிவு எண்.

நேரம்: 2.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 100

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 15 x 1 = 15

1. தமிழ்விடுதூது ______ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2. மல்லல் மூதூர் வயவேந்தே - என்பதில் மல்லல் என்பதன் பொருள்

அ) வண்டு ஆ) வளம் இ) பொய்கை ஈ) குற்றம்

3. தீரா இடும்பைத் தருவது எது?

அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்

இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை. பேணாமை

4. அழியா வனப்பு, ஒழியா வனப்பு அடிக்கோடிட்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு தருக

அ) வேற்றுமைத் தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

5. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

அ) ஊரக திறனறித்தேர்வு ஆ) தேசிய திறனறித் தேர்வு இ) தேசிய திறனறி, கல்வி உதவித்தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

6. பல்லவர்கால சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று

அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

7. மரவேர் என்பது ______ புணர்ச்சி

அ) இயல்பு அ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

8. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?

அ) நுகர்தல் அ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்

9. சீவக சிந்தாமணியிலுள்ள இலம்பகங்களின் எண்ணிக்கை

அ) 13 ஆ) 12 இ) 15 ஈ) 10

10. இந்திய தேசிய இராணுவத்தை ____ இன் தலைமையில் ______ உருவாக்கினார்.

அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர் ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்

இ) மோகன்சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்

11. பொறிமலர் வாரணம் .... கூட்டுறை வயமாப் புலியொடு குழும - இப்பாடலடியின் மூலம் மதுரையில் ______ இருந்த செய்தி அறியலாம்.

அ) வன விலங்கு சரணாலயம் ஆ) பறவைகள் சரணாலயம்

இ) புலிகள் சரணாலயம் ஈ) யானைகள் சரணாலயம்

பாடலைப்படித்து வினாக்களுக்கு விடையளி

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம் தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு

12. பழனம் - என்பதன் பொருள்

அ) மண் ஆ) சோறு இ) பழமை ஈ) நீர் மிக்க வயல்



CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

13. இப்பாடல் எழுதப்பட்டுள்ள பா வகை
அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா
14. அரக்காம்பல் - இச்சொல்லைப் பிரித்தெழுதுக
அ) அரக்கு+ஆம்பல் ஆ) அரக்+காம்பல் இ) அரக்காம்+பல் ஈ) அர+காம்பல்
15. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்
அ) சிலப்பதிகாரம் ஆ) மதுரைக்காஞ்சி இ) சீவகசிந்தாமணி ஈ) முத்தொள்ளாயிரம்

**II. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி (வினா எண்.21 கட்டாயம்) 4 x 2 = 8**

16. அ) 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியது.
ஆ) 'சூடிக் கொடுத்த சுடர்கொடி' என அழைக்கப்படுபவர் ஆண்டாள்
17. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
18. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?
19. இணைய வழியில் இயங்கும் மின்னனு இயந்திரங்கள் நான்கினை எழுது?
20. கருக்கொண்ட பச்சைப்பாம்பு எதற்கு உவமையாகக் காட்டப்பட்டுள்ளது?
21. 'விடல்' என முடியும் குறளை எழுது?

**III. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5 x 2 = 10**

22. வல்லினம் மிகும் இடங்களுக்கு இரண்டு சான்றுகள் தருக
23. பொருத்தமான பெயரடைகளை எழுது (நல்ல, பெரிய, கொடிய)
1. _______ ஓவியமாக வரைந்து வா
2. _______ விலங்கிடம் பழகாதே
24. பிழைநீக்கி எழுதுக.
1. நல்ல தமிழுக்கு எழுதுவோம்
2. குழலியும் பாடத் தெரியும்
25. கலைச்சொல் தருக : அ) Treasury ஆ) Classical Literature
26. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க
அ) சித்திரமும் கைப்பழக்கம் ______
ஆ) இளமையில் கல்வி_______
27. பகுபத உறுப்பிலக்கணம் தருக
அ) கண்டேன்
28. மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக
அ) கண்ணும் கருத்தும்
ஆ) நகமும் சதையும்

**IV. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி 2 x 3 = 6**

29. பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?
30. ஆண்டாளின் கனவுக் காட்சியை எழுதுக?
31. உரைப்பத்தியை படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1906 ஆம் ஆண்டு மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது. அந்த ஆண்டில் தான் காந்தியடிகள் சத்தியாக்கிரகம் என்ற அறப்போர் முறையை தென்னாப்பிரிக்காவில் தொடங்கி வைத்தார். வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயருக்கு எதிராகச் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார் இத்தகைய சிறப்புள்ள ஆண்டில் ஜீன் 26 ஆம் நாள் சென்னை ஆயிரம் விளக்கு வட்டம் 'சால்வன் குப்பம்' என்னும் பகுதியில் ம.பொ.சிவஞானம் பிறந்தார்



CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

வினாக்கள்:

1. ம.பொ.சிவஞானம் பிறந்த ஊர் எது?
2. காந்தியடிகள் சத்தியாகிரகத்தை எங்கு தொடங்கி வைத்தார்?
3. வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேயருக்கு எதிராகத் தொடங்கிய நிறுவனம் எது?

**V. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி (வினா எண்.34 கட்டாயம்)** 2 x 3 = 6

32. டோக்கியோ கேட்ட்ஸ் - குறிப்பு வரைக?
33. நிலைத்த புகழைப் பெறுவதற்கு குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?
34. அடிபிறழாமல் எழுது.
'காடெல்லாம்' எனத் தொடங்கும் பெரியபுராணம் பாடல் (அல்லது)
'பூவாது காய்க்கும்' எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலப் பாடல்

**VI. எவையேனும் 2 வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி** 4 + 2 = 6

35. தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் விளக்கு.
36. இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி விளக்குக?
37. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை
- இக்குறட்பாவில் பயின்றுவந்துள்ள அணியை விளக்குக?

**VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 5 x 5 = 25

38. அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்கு தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுது

**(அல்லது)**

ஆ) ஏமாங்கத நாட்டு வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடு

39. அ) உங்கள் பள்ளி நூலகத்திற்கு தமிழ் - தமிழ் ஆங்கிலம் கையடக்க அகராதிகள் பத்துப் பிரதிகளை பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்தாருக்கு கடிதம் எழுதுக

**(அல்லது)**

ஆ) உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளை கடிதமாக எழுது?

40. அ) முழு உருவச் சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

**(அல்லது)**

ஆ) மொழி பெயர்க்க

1. Strengthen the body
2. Love your food
2. Walk like a bull
4. Union is strength
5. Practice what you have learn

41. சமூகத்திற்கு நீ செய்ய வேண்டிய உனது பணிகளை எழுது?
42. காட்சியைக் கண்டு கவினுற எழுது





www.Padasalai.Net

CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

VIII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி 3 × 6 = 24

43. அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுது?

(அல்லது)

ஆ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரி?

44. அ) எங்கள் ஊர்ச் சந்தை - என்னும் தலைப்பில் நாளிதழ்ச் செய்தி ஒன்றை எழுது?

(அல்லது)

ஆ) நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

45. அ) 'நீரின்றி அமையாது உலகு' - என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக?

(அல்லது)

ஆ) முன்னுரை - தமிழர்களின் வீர விளையாட்டு - இலக்கியங்களில் ஏறுதழுவுதல் - தமிழர் அறம் - பண்பாட்டு அடையாளம் - நமது கடமை - முடிவுரை



www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

CS CamScanner